பொருளடக்கம்



அல்லாஹ் உங்களை நேசிக்க வேண்டுமா? 1

அல்லாஹ் உங்களை நேசிக்க வேண்டுமா? 3

குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

முன்னுரை 17

1 இலகுவான தூய மார்க்கம் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானது 19

2 அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பின்பற்றுதல் 20

3 நல்லமுறையில் செயல்படுபவர்களை அல்லாஹ் நேசிக்கிறான் 21

4 அல்லாஹ் தன்னை அஞ்சக்கூடியவர்களை நேசிக்கிறான் 23

5 அல்லாஹ்வை முழுமையாக சார்ந்திருக்ககூடியவர்களை அவன் நேசிக்கிறான் 23

6 அல்லாஹ் பொறுமையாளர்களை நேசிக்கிறான் 24

7 அல்லாஹ் நீதி செலுத்தக்கூடியவர்களை நேசிக்கிறான் 25

8 அல்லாஹ் பாவமன்னிப்புத் தேடுபவர்களையும் தூய்மையாளர்களையும் நேசிக்கிறான் 26

9 அல்லாஹ் விதித்த கடமைகளை நிறைவேற்றுபவர்களை அவன் நேசிக்கிறான் 27

10 தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயலாகும் 28

11 அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்தல் அவனுக்கு மிகவும் விருப்பமான செயல் 30

12 தொழுகையில் வரிசையின் இடைவெளியை அடைப்பதற்காக எடுத்துவைக்கும் அடி அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது 31

13 இரவில் எழுந்துதொழுபவரை அல்லாஹ் மிகவும் விரும்புகிறான் 32

14 அல்லாஹ் ஒற்றைப்படையை நேசிக்கிறான் 34

15 துல்ஹஜ் மாதத்தின் பத்து நாட்களில் நற்செயல் புரிவது அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானது 34

16 அநியாயக்கார அரசனுக்கு முன்னால் சத்தியத்தை எடுத்துரைப்பது மிகச் சிறந்த ஜிஹாது 35

17 அல்லாஹ்வின்மீது நம்பிக்கைகொள்வது, உறவுகளைப் பேணி வாழ்வது, நன்மையை ஏவுவது, தீமையைத் தடுப்பது ஆகியவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல்களாகும் 36

18 நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை நிறைவேற்றுவது, உண்மை பேசுவது, அண்டை வீட்டாரோடு நல்லமுறையில் நடந்துகொள்வது 37

19 அல்லாஹ்வுக்கு விருப்பமான நான்கு வார்த்தைகள் 38

20 கருணைமிக்க இறைவனுக்குப் பிடித்த இரண்டு வார்த்தைகள் 39

21 தொழுகையில் ஆரம்பமாக ஓதப்படும் பிரார்த்தனை 40

22 அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்வதை அவன் விரும்புகிறான் 41

23 அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான பெயர்கள் 42

24 அல்லாஹ்வுக்குப் பிரியமான மனிதரும் அல்லாஹ்வுக்கு விருப்பமான செயலும் 43

25 அடியார்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் தங்களின் குடும்பத்தாருக்கு மிகவும் பயனளிப்பவர்களே 45

26 நற்குணமுள்ளவர்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் 46

27 அல்லாஹ் யாரை விரும்புகிறானோ அவர்களை சோதனைக்குட்படுத்துவான் 47

28 அல்லாஹ்வுக்குப் பிடித்தமான உணவு 48

29 தன்னைச் சந்திக்க விரும்புபவர்களை அல்லாஹ்வும் சந்திக்க விரும்புகிறான் 48

30 அன்ஸாரிகளை நேசிப்பவர்களை அல்லாஹ் நேசிக்கிறான் 49

31 அல்லாஹ் பலமான நம்பிக்கையாளனை நேசிக்கிறான் 50
32 அல்லாஹ்வை அஞ்சும் பிரபல்யமற்ற, தன்னிறைவு பெற்ற மனிதரை அவன் நேசிக்கிறான் 51
33 உலகத்தில் பற்றில்லாமல் இரு; அல்லாஹ் உன்னை நேசிப்பான் 51
34 ஜமாஅத்தோடு தொழுகையை நிறைவேற்றுவது அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமானது 52
35 ஆமீன் கூறுபவர்களை அல்லாஹ் நேசிக்கிறான் 53
36 உணவருந்திய பிறகு அல்லது நீரருந்திய பிறகு அல்லாஹ்வைப் புகழ்பவர்களை அல்லாஹ் நேசிக்கிறான் 54
37 அல்லாஹ் உயர்ந்த விசயங்களை நேசிக்கிறான் 55
38 அல்லாஹ் வள்ளல் தன்மையையும் வாரிவாரி வழங்குபவர்களையும் நேசிக்கிறான் 56
39 கொடுக்கல், வாங்கலில் தாராளமாக நடந்துகொள்வதை அல்லாஹ் நேசிக்கிறான் 56
40 அல்லாஹ் மன்னிப்பதை விரும்புகிறான் 57
41 அல்லாஹ் மென்மையை விரும்புகிறான் 58
42 அல்லாஹ் புகழை விரும்புகிறான் 59
43 அல்லாஹ் பொறுமையையும் நிதானத்தையும் விரும்புகிறான் 60
44 அல்லாஹ் வெட்கத்தை விரும்புகிறான் 61
45 அல்லாஹ் அழகை விரும்புகிறான் 62
46 அடியான் சலுகைளை பயன்படுத்துவதை அல்லாஹ் விரும்புகிறான் 63
47 செயல்களை நேர்த்தியாகச் செய்வதை அல்லாஹ் விரும்புகிறான் 64
48 அடியான் மீதுள்ள அல்லாஹ்வின் அருட்கொடை அவனிடம் வெளிப்படுவதை அல்லாஹ் விரும்புகிறான் 65
49 தொடர்ந்து செய்யப்படும் நற்செயல்கள்தான் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானது 66
50 அல்லாஹ்வுக்குப் பிடித்தமான இரண்டு துளிகள்; இரண்டு அடையாளங்கள் 67

51 பல் துலக்குவதால் அல்லாஹ் திருப்தியடைகிறான் 68
52 அல்லாஹ்வின் அன்பை பெற்றுத்தரக்கூடியவை 69

3

நல்லமுறையில் செயல்படுபவர்களை அல்லாஹ் நேசிக்கிறான்

❀

إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُحْسِنِينَ

'நிச்சயமாக அல்லாஹ் நல்லமுறையில் செயல்படுபவர்களை நேசிக்கிறான்.' (குர்ஆன் 2:195)

நபி ﷺ அவர்கள் கூறியதாக சமுரா ؓ அறிவிக்கிறார்:

إِنَّ اللهَ مُحْسِنٌ فَأَحْسِنُوا

'நிச்சயமாக அல்லாஹ் நல்லமுறையில் செயலாற்றக்கூடியவன். எனவே நீங்களும் நல்லமுறையில் செயல்படுங்கள்.' (ஸஹீஹுல் ஜாமிஃ 1823)

நபி ﷺ அவர்கள் கூறியதாக அனஸ் ؓ அறிவிக்கிறார்:

إِذَا حَكَمْتُمْ فَاعْدِلُوا وَإِذَا قَتَلْتُمْ فَأَحْسِنُوا فَإِنَّ اللهَ مُحْسِنٌ يُحِبُّ الْمُحْسِنِين

'நீங்கள் தீர்ப்பளித்தால் நியாயமாக தீர்ப்பளியுங்கள். நீங்கள் விலங்குகளைக் கொலைசெய்தால் நல்லமுறையில் கொலை செய்யுங்கள். அல்லாஹ் நல்லமுறையில் செயல்படக்கூடியவன். அவன் நல்லமுறையில் செயல்படக்கூடியவர்களையே நேசிக் கிறான்.' (தப்ரானீ 5735, ஸஹீஹுல் ஜாமிஃ 494)

அல்-இஹ்ஸான் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் படித்தரங்களில் மிகவும் உயர்ந்தது. வணக்கவழிபாடுகளின் பண்பில் மிகவும் மகத்துவமானது. எனவேதான் இது நல்லோர்களின் வணக்கமாக இருந்துவருகிறது. பின்வரும் நபிமொழியில் அல்-இஹ்ஸான் என்பதின் சுருக்கமான விளக்கம் உள்ளது:

الإِحْسَانُ أَنْ تَعْبُدَ اللَّهَ كَأَنَّكَ تَرَاهُ فَإِنْ لَمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ

20

கருணைமிக்க இறைவனுக்குப் பிடித்த இரண்டு வார்த்தைகள்

❀

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா அறிவிக்கிறார்:

كَلِمَتَانِ خَفِيفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيلَتَانِ فِي الْمِيزَانِ حَبِيبَتَانِ إِلَى الرَّحْمَنِ سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ سُبْحَانَ اللهِ الْعَظِيمِ

'இரண்டு வார்த்தைகள் நாவிற்கு மிகவும் இலேசானது, எடைத் தட்டில் மிகவும் கனமானது, கருணைமிக்க இறைவனுக்கு மிகவும் பிடித்தமானது. அவை, 'ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி ஸுப்ஹானல்லாஹில் அளீம். (அல்லாஹ் மிகவும் தூயவன், அவனுக்கே புகழனைத்தும். மகத்துவமான அல்லாஹ் மிகவும் தூயவன்.)' (புகாரீ 6304, முஸ்லிம் 2694)

நபி ﷺ அவர்கள் கூறியதாக அபூ தர் ؓ கூறுகிறார்:

إِنَّ أَحَبَّ الْكَلَامِ إِلَى اللَّهِ أَنْ يَقُولَ الْعَبْدُ: سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

'அடியான் ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி (அல்லாஹ் மிகவும் தூயவன், அவனுக்கே புகழனைத்தும்) என்று கூறுவது அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான வார்த்தையாகும்.' (முஸ்னது அஹ்மது 21429, ஸஹீஹுல் ஜாமிஃ 175)

❊

24

அல்லாஹ்வுக்குப் பிரியமான மனிதரும் அல்லாஹ்வுக்கு விருப்பமான செயலும்

❀

நபி ﷺ அவர்கள் கூறியதாக இப்னு உமர் ؓ அறிவிக்கிறார்:

أَحَبُّ النَّاسِ إلى اللهِ, أَنْفَعُهُمْ لِلنَّاسِ وَأَحَبُّ الْأَعْمَالِ إلى اللهِ سُرُورٌ تُدْخِلُه عَلَى مُسْلِمٍ أو تَكْشِفُ عنه كُرْبَةً أو تَقْضِي عَنْهُ دَيْناً أو تَطْرُدُ عَنْهُ جُوعاً وَلَأَنْ أَمْشِيَ مَعَ أَخِي المُسْلِمِ فِي حَاجَةٍ أَحَبُّ إِلَيَّ مِنْ أَنْ أَعْتَكِفَ فِي هَذَا الْمَسْجِدِ شَهْرًا وَمَنْ كَفَّ غَضَبَهُ سَتَرَ اللهُ عَوْرَتَهُ، وَمَنْ كَظَمَ غَيْظَهُ، وَلَوْ شَاءَ أَنْ يُمْضِيَهُ لأَمْضَاهُ مَلَأَ اللهُ قَلْبَهُ رِضًا يَوْمَ الْقِيَامَةِ وَمَنْ مَشَى مَعَ أَخِيهِ المُسْلِمِ فِي حَاجَةٍ حَتَّى تَتَهَيَّأَ له أَثْبَتَ اللهُ قَدَمَهُ يومَ تَزِلُّ الْأَقْدَامُ وإِنَّ سُوءَ الْخُلُقِ لَيُفْسِدُ الْعَمَلَ كَمَا يُفْسِدُ الْخَلُّ الْعَسَلَ

‘மக்களில் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர் அவர்களுக்கு அதிகம் பயனளிப்பவர்தான். அல்லாஹ்வுக்குப் பிடித்த செயல் ஒரு முஸ்லிமுக்கு மகிழ்ச்சியளித்தல் அல்லது அவனது துன்பத்தை நீக்குதல் அல்லது அவனது கடனை நிறைவேற்றுதல் அல்லது அவனது பசியைப் போக்குவதுதான். ஒரு மாதம் பள்ளிவாயிலில் இஃதிகாஃப் இருப்பதைவிட என் முஸ்லிம் சகோதரனின் தேவைக்காக அவனுடன் செல்வதே எனக்குப் பிரியமானது. எவர் தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாரோ அல்லாஹ் அவரது இரகசியங்களை மறைப்பான். யார் தனது கோபத்தை செயல்படுத்த வாய்ப்பிருந்தும் கட்டுப்படுத்திக் கொண்டாரோ மறுமைநாளில் அல்லாஹ் அவரது உள்ளத்தைத் திருப்தியால் நிரப்புவான். தனது முஸ்லிம் சகோதரனின் தேவைக்காக அவருடன் சென்று அதில் உறுதியாக இருப்பவர்களின் பாதங்களை பாதங்கள் சறுகிவிடும் அந்நாளில் உறுதிப்படுத்துவான். தேனை வினிகர் கெடுத்துவிடுவதைப்போல தீய குணம் செயலைக் கெடுத்துவிடும்.’ (தப்ரானீ 6026, ஸஹீஹுல் ஜாமிஃ 176)

32

அல்லாஹ்வை அஞ்சும் பிரபல்யமற்ற, தன்னிறைவு பெற்ற மனிதரை அவன் நேசிக்கிறான்

❀

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியதாக சஅது இப்னு அபீவக்காஸ் ؓ அறிவிக்கிறார்:

إِنَّ اللهَ يُحِبُّ الْعَبْدَ التَّقِيَّ الْغَنِيَّ الْخَفِيَّ

'நிச்சயமாக அல்லாஹ் தன்னை அஞ்சக்கூடிய, பிரபல்யமற்ற, தன்னிறைவு பெற்ற மனிதரை நேசிக்கிறான்.' (முஸ்லிம் 2965)

❄

33

உலகத்தில் பற்றில்லாமல் இரு; அல்லாஹ் உன்னை நேசிப்பான்

❀

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

ازْهَدْ فِي الدُّنْيَا يُحِبَّكَ اللهُ وَازْهَدْ فِيمَا عِنْدَ النَّاسِ يُحِبَّكَ النَّاسُ

'உலகத்தில் பற்றற்று இரு; அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களின் கைகளில் உள்ளவற்றை விட்டு பற்றற்று இரு; மக்களும் உன்னை நேசிப்பார்கள்.' (அறிவிப்பு: ஸஹ்ல் இப்னு ஸஅது ؓ, சுனனு இப்னு மாஜா 4102, ஸஹீஹுல் ஜாமிஃ 922)

46

அடியான் சலுகைளை பயன்படுத்துவதை அல்லாஹ் விரும்புகிறான்



அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

إِنَّ اللهَ يُحِبُّ أَنْ تُؤْتَى رُخَصُهُ, كَمَا يُحِبُّ أَنْ تُؤْتَى عَزَائِمُهُ

'அடியான் கடமைகளை நிறைவேற்றுவதை அல்லாஹ் விரும்பு வதைப் போன்று அவன் சலுகைகளைப் பயன்படுத்துவதையும் அல்லாஹ் விரும்புகிறான்.' (அறிவிப்பு: இப்னு உமர் ؓ, இப்னு ஹிப்பான் 354, ஸஹீஹுல் ஜாமிஃ 1885)

நபி ﷺ அவர்கள் கூறியதாக இப்னு உமர் ؓ அறிவிக்கிறார்:

إِنَّ اللهَ يُحِبُّ أَنْ تُؤْتَى رُخَصُهُ كَمَا يَكْرَهُ أَنْ تُؤْتَى مَعْصِيَتُهُ

'நீங்கள் பாவங்கள் புரிவதை அல்லாஹ் வெறுப்பது போன்று நீங்கள் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்வதை அல்லாஹ் விரும்புகிறான்.' (இப்னு ஹிப்பான் 2742, ஸஹீஹுல் ஜாமிஃ 1886)